Care Kit என்றிருப்பதை Baby Care Kit என்று மாற்றுகிறார்கள். ஆகவே, அம்மா பெயரை எடுக்க வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் அதைப் பற்றி சொல்லிவிட்டீர்கள். 'அம்மா என்ற பெயரை எடுத்துவிட்டார்கள்' என்று நீங்கள் பதிவு செய்துவிட்டீர்கள். அடுத்த சப்ஜெக்ட்டுக்கு வாருங்கள்.*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *நிலங்களை வகைப்படுத்தி, விதைகளை ஊன்றி, நீரை ஊற்றி, உரம்போட்டு, கண்ணும் கருத்துமாக இந்தத் துறையை வளர்த்தது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. அப்படி வளர்த்த அந்தத் துறையில் . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நிறைய உதாரணங்களுடன் சொல்லியாகிவிட்டது. நீங்கள் சொன்ன* time *முடிந்துவிட்டது. நேரம் இப்பொழுது 1–01 ஆகிறது. 1 நிமிடம் கூடுதலாகப் பேச வாய்ப்புத் தந்தாகிவிட்டது. போதும்.*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *அரசு தற்போது இளைப்பாறிக்கொண்டிருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்களை 23 நிமிடங்கள் பேச அனுமதித்திருக்கிறேன். போதும், நன்றி.* (குறுக்கீடு) *உங்களுடைய உறுப்பினர்தானே பேசுகிறார். உட்காருங்கள்.* (குறுக்கீடு) *உங்களுடைய உறுப்பினர்தான் பேசுகிறார்.* (குறுக்கீடு) *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் விஜயபாஸ்கர், நீங்கள் உட்காருங்கள்.* (குறுக்கீடு) *உங்களுடைய உரை முடிந்துவிட்டது அல்லவா?*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *பெயர்களை மாற்றுவதிலே கவனம் செலுத்துவதைத் தவிர்த்து, நல்ல பெயரை ஈட்ட வேண்டுமென்று நான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் வலியுறுத்தி, அமர்கின்றேன்.*

7. கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகம் உறுப்பினர்களுக்கு உரிய காலத்தில் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகம் காலதாமதமாக வந்தது என்று சொன்னீர்கள்.* (குறுக்கீடு) *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு மைக் கொடுங்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகம் உரிய நேரத்தில் வழங்கப்படுவதில்லை. 488 பக்கங்கள் இருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தை இரவு 11–00 மணிக்குக் கொடுத்தால், இதை உறுப்பினர்கள் படித்துப் பார்த்துவிட்டு, தங்களுடைய கருத்துகளை எப்படிச் சொல்ல முடியும்? ஆகவே, இனி வருங்காலத்திலாவது கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகங்கள் குறிப்பிட்ட நேரத்தில் கிடைப்பதற்குத் தாங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று அவையின் உறுப்பினர்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகங்கள் காலதாமதமாக வழங்கப்படுவதைப் பற்றி நான் பலமுறை கேட்டிருக்கிறேன். ஞாபகம் இருக்கிறது இல்லையா? (குறுக்கீடு) உங்களுக்கு கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகங்களை அச்சடித்தவர்கள்தான், எங்களுக்கும் அச்சடிக்கிறார்கள். இதே தொல்லைதான்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும் சொன்ன கருத்து ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஏற்கெனவே பேரவைச் செயலாளர் அவர்களும், பேரவைச் செயலக அலுவலர்களும் அதற்காகக் காத்திருந்துதான் பணி செய்துகொண்டிருக்கிறார்கள். கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகங்கள் எந்த நேரத்தில் செயலகத்திற்கு வழங்கப்பட்டாலும், அவை தரப்பட்ட அடுத்த நிமிடமே எடுத்துச் செல்லப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. இது சம்பந்தமாக ஏற்கெனவே துறைச் செயலாளர்கள், துறை அதிகாரிகளையெல்லாம் அழைத்து கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகங்களை முன்னதாகவே தாருங்கள் என்று அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் நினைக்கிற மாதிரிதான் பேரவைச் செயலகத்தில் 450 பணியாளர்களும் அதே கவனத்துடன் பணியாற்றுகிறார்கள். பல நாட்கள் இவர்கள் வீடுகளுக்கே போவதில்லை. ஏனென்றால், கொள்கை விளக்கக்*

குறிப்புப் புத்தகங்கள் காலதாமதமாக வருவதால் அவ்வளவு கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, இனிவருங்காலங்களில் அவ்வாறு நடக்காமல் இருக்க ஏற்பாடு செய்யப்படும்.

மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: இந்தப் புத்தகங்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு atleast one day advance ஆகக் கிடைத்தால்தான் அவர்களால் படிக்க முடியும். கடைசி நேரத்தில் அனுப்பினால், அவற்றை எப்படி அவர்களால் படிக்க முடியும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொன்ன கருத்து கண்டிப்பாக கவனத்தில் கொள்ளப்படும்.

6. மானியக் கோரிக்கைகள், 2022–2023, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

கோரிக்கை எண் 19-மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் ஏதோ சொல்ல முற்படுகிறார்கள். (குறுக்கீடு) உங்களுக்கும் அந்தப் புத்தகம் காலதாமதமாகக் கிடைத்ததா?

திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, நீங்கள் சொன்னவுடன், அவரும் தன்னுடைய உரையை முடித்துவிட்டார். அதில் மாற்றுக்கருத்து இல்லை. இதற்கு முன்பும் இதைப் பற்றி நான் வலியுறுத்தியிருக்கிறேன். 2011 ஆட்சிக் காலத்தில் தே.மு.தி.க. எதிர்க்கட்சியாக இருந்தது. அப்பொழுதும் சரி, அதற்குப் பிறகும் சரி. முதலில் பேசுகின்ற உறுப்பினர்கள் சுமார் ஒரு மணி நேரம் வரையில் பேசியிருக்கிறார்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர்களும் பதில் சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது அவர்கள் என்ன பேசினாலும், அதற்கு மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். நேற்றைய முன்தினம்கூட பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினர் பேசுவதற்கு முழுமையாக ½ மணி நேரம் கொடுத்தீர்கள். அது உங்களுடைய உரிமை. தற்போது பேசிய எங்களுடைய மாண்புமிகு உறுப்பினர், அமைச்சராக இருந்தவர்.